**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 15/2021 |
| Name | : Thangavel |
| P.W. | : 1 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**3 ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கிளுவன்காட்டுரில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். முத்துச்சாமி என்பவர் எனது அப்பா. ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனக்கு சித்தப்பா. 02.10.2020ம் தேதி காலை 08.00 மணிக்கு நானும், எனது அப்பா, எனது மனைவி எங்களது காட்டில் தண்ணீர் பாய்ச்ச சென்றிருந்தோம். அப்போது வேலுச்சாமி, மருதமுத்து மற்றும் மணிமாறன் ஆகிய மூன்று பேரும் வந்து காடு அவர்களுடையது என்று சொல்லி தடியால் என்னையும், எனது அப்பாவையும் அடித்தார்கள். எனக்கு தலையில் காயமும், இடது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. எனது அப்பாவிற்கு தலையில் காயம் ஏற்பட்டது. எதிர்கள் எங்களை அடித்துவிட்டு சென்றுவிட்டனர். நானும், எனது அப்பாவும் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றோம். போலீஸிடம் எனது அப்பா வாக்குமூலம் கொடுத்தார். தற்போது எனது அப்பா இறந்துவிட்டார். என்னிடம் காட்டப்படும் மரக் கட்டையால் என்னை

அடிக்கவில்லை. வேறு கட்டையால் தான் அடித்தார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) ஆஜர் எதிரி மருதமுத்து எனது சித்தப்பா மகன் என்றால் சரிதான். நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிரிகள் மருதமுத்துவும், மணிமாறனும் எங்கள் மீது மாண்பமை உடுமலைப்பேட்டை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.159/2020 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எங்கள் மீது கொமரலிங்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து குற்ற எண்.691/2020 என்ற வழக்கு பதிவு செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்களுடைய பூமியும், அவர்களின் பூமியும் இணைபொழி என்றால் சரிதான். உரிமையியல் வழக்கு சம்மந்தமான நிலத்தில் தான் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டு இருந்தோம் என்றால் சரிதான்.

(2) எங்களுக்கும், எதிரிகளுக்கும் பாத்தியப்பட்ட பூமி ஆரம்பத்தில் ஒரே பூமியாக இருந்தது என்றால் சரிதான். எங்கள் குடும்பத்திற்குள் பாகம் செய்து கொண்டோம். பூமி அளவுகள் சம்மந்தமாக எங்களுக்குள் கருத்து வேறுபாடு இருந்தது என்றால் சரிதான். புகாரை காவல் நிலையத்தில் எப்போது கொடுத்தோம் என்றால் போலீஸ் தரப்பில் வந்து வாங்கினார்கள். மறு நாள் மருத்துவமனைக்கு வந்தார்கள். என்னையும், எனது தகப்பனாரையும் காவல் நிலையத்தில் எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் எங்களை மருத்துவமனையில் வைத்து விசாரித்தார்கள். என்னை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் மருத்துவமனையில் ஒரு முறையில் எங்கள் வீட்டில் ஒரு முறையும் விசாரித்தார்கள். தற்போது நீதிமன்றத்தில் சொன்னது போல் தான் போலீஸிடம் சொன்னேன்.

(3) போலீசார் விசாரணையில் கீழே கிடந்த மரக்கட்டையை எடுத்து அடித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. என்னை அடித்ததாக சொல்லும் கட்டையை அதன் பின்பு நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். அது அங்கேயே துளாகிவிட்டது. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் ஓட்டி வரும் பூமிக்குள் நாங்கள் தான் அவர்களை அடித்து காயப்படுத்தினோம் என்றால் சரியல்ல. பூமி

சம்மந்தமாக நாங்கள் உரிமையியல் வழக்கு எதுவும் தாக்கல் செய்யவில்லை. நானும், எனது தகப்பனாரும் சேர்ந்து எதிரிகளை தகாத வார்த்தையால் பேசி அவமானப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கு கொலை மிரட்டல் விடுத்தோம் என்றால் சரியல்ல அவர்கள் தான் எங்களுக்கு கொலை மிரட்டல் விடுத்தார்கள். எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சிவில் சம்மந்தமாக உள்ள பிரச்சனையை கொண்டு நானும், எனது தகப்பனாரும் பொய்யாக புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:28:37 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 15/2021 |
| Name | : Mariammal |
| P.W. | : 2 |
| Spose Name | : Muthusamy |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **11.06.2026**

**3 ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கிளுவன்காட்டுரில் வசிக்கிறேன். அ.சா.1 எனது மகன். ஆஜர் எதிரியை தெரியும் எனது கொழுந்தனார் மகன். எனது மகன், மருமகள் காட்டிற்குள் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார்கள். கொழுந்தார் மற்றும் அவரது மகன்கள் அவர்களது காட்டில் இருந்து வந்து அடித்துவிட்டார்கள். நான் சற்று தள்ளி இருந்தேன். கொழுந்தனார், அவரது இரண்டு மகன்கள், எனது மகன் மற்றும் எனது கணவர் முத்துச்சாமி ஆகியோர் சண்டைகட்டிக்கொண்டார்கள். நான் சென்று பார்த்த போது எனது மகனுக்கு கையில் ரத்தம் வந்தது. எனது கணவருக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் வந்தது. எனது கணவரும், மகனும் அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். எனது கணவர் தற்போது இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் விசாரித்தார்களா என்று ஞாபகம் இல்லை. 5-6 வருடங்கள் ஆகிவிட்டது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) எங்களுக்கும், எனது கொழுந்தனார் குடும்பத்திற்கும் பூமி சம்மந்தமாக பிரச்சனை இருந்தது என்றால் பாகம் பங்கிக்கொண்ட பின்பு பிரச்சனை ஏற்பட்டது. எதிரிகள் எங்கள் மீது உரிமையியல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்களா என்றால் ஞாபகம் இல்லை. எனது கணவர் கொடுத்த புகார் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:28:44 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 15/2021 |
| Name | : Kavitha |
| P.W. | : 3 |
| Spose Name | : Thangavel |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**11.06.2026**

**3 ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSSன் படி மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கிளுவன்காட்டுரில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். அ.சா.1 எனது கணவர். அ.சா.2 எனது மாமியார். ஆஜர் எதிரியை தெரியும். எனது சின்ன மாமனார் மகன். 02.10.2020ம் தேதி காலை 07.00-07.30 மணிக்கு எங்கள் தோட்டத்தில் நான், எனது மாமனார், எனது கணவர் கீரைக்கு தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தோம் அப்போது எனது சின்ன மாமனார் வேலுச்சாமி, அவரது மகன்கள் மருதமுத்து மற்றும் மணிமாறன் ஆகியோர் வந்து காட்டிற்குள் நிற்காதீர்கள் அகட்டை போங்க என்று கெட்ட வார்த்தையால் பேசினார்கள். மணிமாறன் எனது மாமனாரை தடியால் அடித்தார்கள். என்னிடம் காட்டப்படும் தடியால் அடிக்கவில்லை. எனது மாமனாரும், சின்ன மாமனாரும் ஒருவருக்கொருவர் அடித்துக்கொண்டார்கள். எனது கணவர் குறுக்காட்ட சென்றார் அவரையும் மணிமாறன் கையில் அடித்துவிட்டார். எனது கணவருக்கு கையில் எலும்பு

உடைந்துவிட்டது. எனது மாமனாருக்கு மண்டை உடைந்து ரத்தம் வழிந்தது. நான் விலக்கிவிட்டேன். எதிரிகள் அங்கிருந்து சென்றுவிட்டார்கள். எனது மாமனாரும், கணவரும் உடுமலை அரசு மருத்துவமனைக்கு சென்றார்கள். எனது மாமனார் தற்போது இறந்துவிட்டார். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) பூமி சம்மந்தமாக சிவில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எங்கள் இரு குடும்பத்திற்கும் பூமி அளவுகள் சம்மந்தமாக பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். இதே நீதிமன்றத்தில் எதிரிகள் கொடுத்த புகாரின் பேரில் எனது கணவர் மீது குற்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். எனது கணவர் மற்றும் மாமனார் எதிரிகளை அடித்துவிட்டதாக தான் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல அவர்கள் தான் வந்து எனது கணவர் மற்றும் மாமனாரை அடித்தார்கள். நாங்கள் திருப்பி அடித்தோம் அவர்கள் முதலில் புகார் கொடுத்துவிட்டார்கள். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றும், எனது மாமனார் கொடுத்த புகார் என்பதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் மற்றும் கணவருக்கு ஏற்பட்ட காயத்திற்கும், எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.06.11 18:28:49 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்